Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 58/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சபரிநாதன் |
| Father's Name | -- | பாலசுப்பிரமணியம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 5th day of February 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது வெள்ளக்கோவிலில் குடியிருந்துவருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். நான் தேங்காய் பருப்பு கமிஷன் தொழில் செய்துவருகிறேன். 2014 ம் ஆண்டு மதியம் ஒரு நாள் எதிரி ஜெயபிரகாஷ் எனது அலுவலகத்திற்கு வந்தார். அவரை உடுமலைபேட்டை ராஜசேகர் அழைத்துவந்து அறிமுகப்படுத்தினார். ராஜசேகர் பரிந்துரைசெய்ததன்பேரில், எதிரி ஜெயபிரகாஷ் க்கு ரூ.8,11,600/- மதிப்புள்ள தேங்காய் பருப்புகளை ஏற்றிஅனுப்பிவைத்தேன். மேற்படி தேங்காய் பருப்புகளை வாங்கிய ஏஎம்எஸ் ஆயில் மில்லில் நான் தொடர்பு கொண்டு கேட்டபோது, அப்பு டிரேடர்ஸ் கணக்கில் செலுத்திவிட்டதாக கூறினார்கள். அந்த அப்பு டிரேடர்ஸ் ஜெயபிரகாஷ் க்கு சொந்தமானது என்று பில்லில் கண்டுள்ளது. ஜெயபிரகாஷ் எனக்கு எந்த பணமும் தரவில்லை. பொள்ளாச்சி ஓரியண்டல் பேங்க் க்கு எதிரி என்னை வரச்சொன்னார். நான் அங்கு சென்றேன். ஆனால் அவர் பேங்கிலிருந்து பணம் எடுத்துத்தரவில்லை. எனக்கு பணம் தராமல் ஏய்த்துவந்தார். எனவே நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். நான் அவரது உறவினர்கள் மூலமாக அவரை தொடர்பு கொள்ள முயற்சித்தேன். போலிசார் விசாரணையை தீவிரபடுத்தியதில் அவர் எனக்கு தொடர்பு கொண்டு சிறிது காலம் அளிக்குமாறும், பணத்தை திருப்பி தந்துவிடுவதாகவும் கூறினார். அதன்பின்பும் தன் கையில் இருந்தபணத்தை சூதாட்டத்திலும், பெற்ற கடனிற்கும் தீர்த்துவிட்டதாகவும் அறிமுகப்படுத்திவிட்டவர்க்கும் கொடுத்து

தீர்த்துவிட்டதாகவும், மேலும் காலம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். இவ்வாறாக தட்டிகழித்துக்கொண்டே வந்திருக்கிறார். 2016ம் வருடம் 6வது மாதம் ஒருநாள் நான் இதுசம்பந்தமாக அவரிடம் கேட்டபோது, அவர் வீட்டு வாசலில் வைத்து என்னை தாயோழி என்று கண்டபடி கெட்டவார்த்தையால் திட்டியதால் நான் மனஉளைச்சல்க்கு ஆளானேன். பின்பு பாலு காம்பளக்ஸ் வந்தால் பணம் தந்துவிடுவதாக கூறினார். ஆனால் அங்கும் தரவில்லை. என்னை அளகளிக்கவைத்தார். அதனால் நான் தற்கொலை செய்யுமளவிற்கு துாண்டப்பட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அதசாஆ. 1. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2

பொள்ளாச்சி